# செய்தி மடல்

## NEWSLETTER - SEPTEMBER 2009


தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ் Tamil Study Centre, Homebush Inc.
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au


<u>வாணி விழா – 26.09.2009</u>

வருடா வருடம் எமது தமிழ்க் கல்வி நிலையம் முப்பெரும் தேவியர்களை வழிபட்டு நவராத்திரி தினத்தில் விழாக் கொண்டாடுவது வழக்கம். இம்முறை எம் கல்வி நிலைய வாணிவிழா 26ம் திகதி செப்டம்பர் மாதம் பி.ப. 2:00 மணிக்கு கலைமகளுக்கான பூஜை வழிபாட்டுடன் ஆரம்பமாகி, கல்வி நிலைய மாணவர்களின் பல கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்புறவுள்ளது. இவ் வைபவத்திற்கு வருகைதந்து முப்பெரும் தேவியர்களின் அருளைப் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.





<u>தமிழ் அறிவுப்போட்டி பரிசளிப்புதினம்-03.10.2009</u>

இம்முறை இடம்பெற்ற தமிழ் அறிவுப்போட்டியில் அதிக மாணவர்கள் மிக ஆர்வத்துடன் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 3ம் திகதி ஒக்டோபர் மாதம் பி.ப 2:00 மணிக்கு வழங்கப்படும்.

<u>அமைச்சர் விருது 2009</u>

அண்மையில் இடம்பெற்ற அமைச்சர் விருது வைபவத்தில் எமது பாடசாலை மாணவன் **செல்வன் கண்ணன் சுபபிரியன்** (கீழ்ப்பிரிவு), மதிப்பிற்குரிய அமைச்சர் Verity Firth இடம் இருந்து 2009ம் ஆண்டிற்கான அமைச்சர் விருதினைப் பெற்றுள்ளார். இவ்வைபவத்தில் **செல்வன் சிவாயன் சரவணபவானந்தன்** (மேற்பிரிவு) சிறப்பு விருதினை பெற்றுள்ளார். இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த பரிசுகளைப்பெற எமது மாணவர்கள் எடுக்கும் முயற்சிக்கும், இதில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் எமது கல்வி நிலையம் பாராட்டைத் தெரிவிக்கின்றது. இவ்வைபவம் 04.09.2009 அன்று University of New South Wales இல் சிறப்பாக இடம்பெற்றது. இவ்வைபவத்திற்கு ஆசிரியர்களும், நிர்வாகக் குழுவினரும் கலந்துகொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

## <u>Teacher's 10 year service Award</u>

எமது கல்வி நிலையத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிவரும் ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டி, NSW Federation of Community Language Schools நடாத்திய விருந்துபசார வைபவத்தில் இவர்களை கௌரவித்தார்கள், இம்முறை 10 ஆண்டு சேவை விருதைப் பெற்ற ஆசிரியர்கள்: **திருமதி விஜயநாதன், திருமதி குலராஜா, திருமதி சிவசுப்பிரமணியம், திருமதி வனதேவா, திருமதி யோகேந்திரம், திருமதி புருசோத்தமர்** ஆகியோர். இவ் ஆசிரியர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக ஆற்றும் தன்னலமற்ற சேவைக்கு எமது கல்விநிலையம் பாராட்டைத் தெரிவிக்கின்றது.

## <u>Drawing and Writing Competition 2009</u>

NSW Federation of Community Language Schools இனால் நடாத்தப்பட்ட வரைதல், மற்றும் கட்டுரை எழுதுதல் போட்டிகளில் எமது கல்விநிலைய மாணவர்கள் பங்கு பற்றியிருந்தார்கள். இம்முறை **செல்வி ரிசானி கௌரிதாசன்,** *"A celebration from my community and how it enhances our multicultural Australia"* எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தைப்பெற்று, 5ம் திகதி செப்டம்பர் மாதம் NSW Federation of Community Language Schools நடாத்திய வருடாந்த விருந்துபசார வைபவத்தில் 150 வெள்ளிகளைப் பரிசாகப் பெற்றுள்ளார். இப்போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு எமது கல்விநிலையம் பாராட்டைத் தெரிவிக்கின்றது.

## <u>HSC Exam 2009</u>

இம்முறை இடம்பெறவுள்ள HSC பரீட்சைக்கு எமது கல்விநிலையத்தில் பயிலும் 28 மாணவர்கள் தோற்றவுள்ளார்கள். இவர்களை உரியமுறையில் பயிற்றுவித்து தமிழை TWO UNITS பாடமாக எடுப்பதற்கு தயார்படுத்திய தமிழ்க் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும், தமிழ் அறிவை வளர்க்கும் மாணவர்களுக்கும் எமது கல்விநிலையம் பாராட்டைத் தெரிவிப்பதுடன், இம்மாணவர்களுக்கு பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகின்றது. சென்ற வருடம் எமது கல்வி நிலையத்தைச் சேர்ந்த 3 மாணவர்கள் Band 6 இல் சித்திபெற்றது குறிப்பிடத்தக்கது.

### பாடசாலைக் கட்டணம்

தமிழ்க் கல்வி நிலையத்தின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கம் தரும் பணத்தை விட அதிகமாகத் தேவைப் படுவதால், பெற்றோர்கள் தயவு செய்து பாடசாலைக் கட்டணத்தை முன்கூட்டியே செலுத்துமாறு நிர்வாகக் குழுவினர் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

### Essay Competition Winners



Tishani Gowrythasan with NSWFLS President and other winners

### Teachers 10 Year Service Award



Mrs Purushothamar, Mrs Sivasubramaniyam, Mrs Kularajah, Mrs Vijayanathan, Mrs Vanatheva, Mrs Yogendram.

**மூன்றாம் தவணை நிறைவு – 03.10.2009**
**நான்காம் தவணை ஆரம்பம் – 24.10.2009**

### ஞாயிறு தமிழ்ப் பாடசாலை

பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கும், பாடசாலைப் படிப்பை முடித்தவர்களுக்கும், மற்றும் வளர்ந்தவர்களுக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை தமிழ்ப் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. இதனால் இளைஞர்கள் தமிழை கற்பதற்கு மிகவும் வசதியாக உள்ளது. மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

### Ministers Award




Kannan Subapriyan with Mrs Malini Somaskanthan (Vice Principal), and Mr Kana Linghanathan (President)

### முக்கிய தினங்கள்

24.10.09 – நான்காம் தவணை ஆரம்பம்
31.10.09 – எழுத்துப் பரீட்சை 2
14.11.09 – வாசித்தல் பரீட்சை 2
28.11.09 – ஆண்டிறுதிப் பரீட்சை
19.12.09 – பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு
19.12.09 – பரிசளிப்பும் இராப்போசன விருந்தும்
19.12.09 – 4ம் தவணை நிறைவு நாள்

### இணையத்தளம்

எமது கல்வி நிலைய இணையத்தளம் multimedia வசதிகளைக் கொண்ட ஒரு இணையத்தளமாக வலுப்பெற்றுள்ளது. மாணவர்களின் தரமான ஆக்கங்களை video, audio வடிவத்திலும் தரக்கூடியதாக உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**www.tsch.org.au** **info@tsch.org.au**